GCI

# பாடம் 2
# துதி ஆராதனை

**நோக்கம்**:

இந்த பாடத்தின் முடிவில் உங்களால்,

- ✓ ஆராதனைக்கான வேத ஆதாரங்களை வரையறுக்க முடியும்
- ✓ ஆராதனையின் முக்கியத்துவத்தை விளக்க முடியும்
- ✓ துதித்தலுக்கும் ஆராதித்தலுக்குமுள்ள வித்தியாசத்தை தர முடியும்
- ✓ துதி ஆராதனையின் நடைமுறை காரியங்களை செயல்படுத்த முடியும்
- ✓ ஆராதனை நடத்துவதில் சில வரைபாடுகளை பின்பற்றமுடியும்.

**பாடத்திட்டம்:**

1. ஜெபம் மற்றும் ஆராதனை செய்வதற்கான காரணங்கள்

   அ. ஆராதிப்பவர்களை ஆண்டவர் தேடுகிறார்
   ஆ. ஆராதிப்பதற்காகவே நம்மை அவர் படைத்திருக்கிறார்.
   இ. வேதம் நம்மை ஆண்டவரை துதிக்க சொல்கிறது
   ஈ. ஆண்டவர் நமது துதிகளுக்கு பாத்திரர்
   உ. ஆராதனை மனந்திரும்புதலையும் துய்மையாகுதலையும் கொண்டு வருகிறது
   ஊ. நாம் ஆண்டவருடைய சமூகத்திற்கு வரும் போது ஆராதனை நம்மை ஒன்று சேர்த்து, நமது இதயங்கள் அவருடைய வார்த்தையை கேட்கும்படி ஆயத்தப்படுத்துகிறது.

2. துதியின் விலை

3. துதித்தலுக்கும் ஆராதித்தலுக்குமுள்ள வித்தியாசம்

   அ. துதி
   ஆ. ஆராதனை
   இ. நமது துதி ஆராதனையில் மூன்று அடிப்படைக் கூறுகள் உள்ளன

4. எப்படி துதித்து ஆராதிப்பது?

   அ. ஆண்டவர் கேட்கும்படியாக
   ஆ. ஆண்டவர் பார்க்கும்படியாக
   இ. நம் சரீர அசைவுகளாலே

5. துதி ஆராதனையின் பலன்கள்

   அ. தேவ சமூகத்தை உணரமுடியும்
   ஆ. தேவ வலலைமை வெளிப்படும்
   இ. வெற்றிக்கான ஆவிக்குரிய ஆயுதம்

6. துதி ஆராதனை நடத்துவது எப்படி?

GCI

அ. ஆராதனை நடத்த தலைவர் தேவை
ஆ. தலைவரின் ஆயத்தப்பணிகள்
இ. சில பொதுவான வழிகாட்டிகள்
ஈ. இசை வாசிப்போருக்கு கொடுக்க வேண்டிய சமிக்கைகள்

GCI

# 1. முன்னுரை

ஏசாயா 43:18-21

ஆண்டவர் நமது துதி ஆராதனையில் ஒரு புதிய காரியத்தை செய்ய விரும்புகிறார். எனவே நாம் திறந்த இருதயமும் திறந்த ஆவியும் உள்ளவர்களாயிருப்போம்.

சங். 16:11

உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

சில நேரம் நாம் நம்மை சுற்றி பாரம்பரியம் மற்றும் சபை பெருமை போன்ற சுவர்களை கட்டிக் கொள்கிறோம். புதிய காரியங்களை வரவேற்க பயப்படுகிறோம்.

# 2. ஜெபம் மற்றும் ஆராதனை செய்வதற்கான காரணங்கள்

### அ. ஆராதிப்பவர்களை ஆண்டவர் தேடுகிறார் – யோவான் 4:23-24

- நாம் ஆவியிலே ஆராதிக்க வேண்டும். பாரம்பரியத்தினாலோ, அறிவினாலோ அல்ல, இருதயத்திலிருந்து ஆராதிக்க வேண்டும்.

  நாம் ஆராதிக்கும் போது தேவன் நமது வார்த்தைகளை மாத்திரமல்ல, நம் இதயத்தின் மனப்பான்மையையும் பார்க்கிறார்.

  ஏசா 29:13 ல் ஆண்டவர் சொல்கிறார், இந்த ஜனங்கள் தங்கள் ஆவியினாலல்ல, மனிதர்கள் கற்று கொடுத்த வார்தையினால் மாத்திரம் என்னை ஆராதிக்கிறார்கள்.

  ஆராதனை என்பது நமது ஆவி தேவ ஆவியோடு இடைபடுவதாகும். நம் இதயத்திலிருந்து உண்மையோடு வர வேண்டும். சரியான வார்த்தைகளை சொல்வது மட்டும் போதாது, அதின் அர்த்தத்தை இதயத்தில் உணர வேண்டும்.

  1சாமு 16:7, மனுஷன் முகத்தை பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார்.

- நாம் உண்மையோடு ஆராதிக்க வேண்டும். தேவன் உண்மையாக எப்படி வேதத்தில் வெளிப்பட்டிருக்கிறாரோ அப்படியே ஆராதிக்க வேண்டும்.

  நாம் ஜீவத்தண்ணீரை பருகும் போது, அது ஊற்றாக பெருக்கெடுத்து செழிப்பான வாழ்வளிக்க பாய்கிறது.

### ஆ. ஆராதிப்பதற்காகவே நம்மை அவர் படைத்திருக்கிறார். ஏசா 43:21

சங் 145:10-11

நாம் அவரின் மமகிமையைக் குறித்து பறைசாற்ற வேண்டும். வல்லமையைக் குறித்து பேச வேண்டும். அவரை துதிக்கும் போது அது நம்மை மாற்றுகிறது.

GCI

ஆராதனையின் முக்கிய பகுதி அர்ப்பணிப்பு. (ரோ 12;1). இது ஆண்டவரின் அன்பையும் இரக்கத்தையும் கண்டு இயற்கையாக வரும் உணர்வாகும்.

உண்மையான ஆராதனை ஆண்டவருக்கு சந்தோஷத்தை கொண்டுவரும். நாம் நம்மை முழுமையாக ஆண்டவருக்கு அர்ப்பணிப்தே ஆராதனை. ஆராதனை என்பது ஒரு வாழ்க்கை முறையாகும்.

***இ. வேதம் நம்மை ஆண்டவரை துதிக்க சொல்கிறது***

கர்த்தரை நான் எக்காலத்திலுமி ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். சங். 34:1

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. சங் 103:1

சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா. சங் 150: 1, 6 (சங் 149, 148, 147, 146)

ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; ஏசா 61:3

நம் தேவன் நம்மை துதிக்கும்படியாக கேட்கவில்லை, கட்டளையிடுகிறார். ஏனென்றால் ஆராதனை நெருக்கமான உறவை ஏற்படுத்துகிறது.

***ஈ. ஆண்டவர் நமது துதிகளுக்கு பாத்திரர். வெளி 4:11; 5:9-13***

நாம் ஆண்டவரை துதிக்கும் போது அவரின் இராஜாங்கத்தை அறிவித்து, நம் வாழ்க்கையில் அவரை வீற்றிருக்கப் பண்ணுகிறோம். நாம் பெற்றுக்கொள்ளும்படியல்ல கொடுக்கும்படி அவரிடம் வருகிறோம். அவர் எவ்வளவு பெரியவர் என்று விவரிக்கின்றோம்.

***உ. ஆராதனை மனந்திரும்புதலையும் தூய்மையாகுதலையும் கொண்டு வருகிறது. ஏசா 6:1-9***

ஆராதனை பாவ உணர்வையும் சுத்திகரிப்பையும் கொண்டுவருகிறது. பின் ஆண்டவரிடம், இதோ இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்று கூற முடியும்.

ஊ. நாம் ஆண்டவருடைய சமூகத்திற்கு வரும் போது ஆராதனை நம்மை ஒன்று சேர்த்து, நமது இதயங்கள் அவருடைய வார்த்தையை கேட்கும்படி ஆயத்தப்படுத்துகிறது.

## 3. துதியின் விலை

நாம் துதி ப- யை தேவனுக்கு முன்பாக கொண்டுவருவோம்.

1. பெலன்: சில நேரம் நாம் அதிக களைப்பாக உணர்வோம்

2. ஆயத்தம்: யார் ஏறுவார்? கைகளில் சுத்தமுள்ளவனும், இதயத்தில் மாசில்லாதவனுமே. (சங் 24:3-4)

GCI

3. நேரம்: சில நேரம் நாம் அதிக வேலையுள்ளவர்களாகிவிடுகிறோம். தேவனுக்கு கொடுக்க நேரம் இல்லாமல் போகிறது. உதாரணத்திற்கு மார்த்தாள் மரியாள் (லுக். 10:40-42)

நாளா 21:24 ல் தாவீது சொல்கிறார்,

நான் உன்னுடையதை இலவசமாய் வாங்கி, கர்த்தருக்குச் சர்வாங்க தகனத்தைப் பலியிடாமல், அதைப் பெறும் விலைக்கு வாங்குவேன்.

## 4. துதிக்கும் ஆராதனைக்கும் உள்ள வித்தியாசங்கள்

***அ. துதி***

ஒருவரை புகழ்ந்து பாராட்டி அவர் பெரியவரென்று வாழ்த்துதல்

துதி என்பது நாம் ஆண்டவரை நோக்கி ஏறெடுப்பது அல்லது மற்றவரிடம் அவரை பற்றி சொல்வது

துதிக்கும் போது ஆண்டவர் யார் என்றும் அவர் நமக்கு என்னென்ன நன்மைகள் செய்திருக்கிறாரென்றும் சொல்ல வேண்டும்

*1. யூதாவும் துதியும்*

ஆதி. 29:35, அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று இப்பொழுது கர்த்தரை துதிப்பேன் என்று சொல் அவனுக்கு யூதா என்று பேரிட்டாள். யூதா – துதி. ஆண்டவர் யூதாவின் மேல் ஒரு சிறப்பு சலுகையை காட்டினார். மேசியா பிறந்த கோத்திரம் யூதா கோத்திரம்.

நியாய. 1:1-2 கானானியருடன் முதல் யுத்தம் செய்தது யூதா கோத்திரம்

சங் 114:2 யூதா கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம்

சங் 76:1-2 யூதாவில் தேவன் அறியப்பட்டவர்

*2. நாம் சங்கீதப் புத்தகத்திருந்து கர்த்தரை துதிக்கலாம்*

சங் 46:1 தேவன் என் அடைக்கலமும் பெலனும்

சங் 18:2 என் கன்மலை, கோட்டை இரட்சகர், என் தேவன், நான் நம்பியிருக்கிற துருகமும், உயர்ந்த அடைக்கலமுமானவர்.

சங் 23:1 என் மேய்ப்பர்

சங் 145:8-9 இரக்கமும் மன உருக்கமும நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்.

சங் 95:1-5 மகா தேவன், மகா ராஜா, நம் சிருஷ்டிகர்

சங் 96:4-6 கர்த்தர் பெரியவரும் மிகவும் ஸ்தோத்தரிக்கப்படத் தக்கவருமாயிருக்கிறார்.

GCI

இந்த வசனங்களில் நாம் கர்த்தரிடம் எதுவும் கேட்கவில்லை, ஆனால் அவரை உயர்த்துகிறோம். நாம் ஒருவரை நேசிப்போமானால் அதை அவர்களிடம் சொல்ல வேண்டும். அவர்கள் அதை கேட்க பிரியப்படுவார்கள்.

**ஆ. ஆராதனை**

மத் 4:10

நம்முடைய தேவனாகிய கர்த்தரையே ஆராதித்து அவர் ஒருவரையே பணிந்து கொள்வாயாக.

- ✓ ஆராதனை என்பது ஒருவருக்கு மதிப்பை கொடுப்பது அல்லது பாத்திரராய் எண்ணுவது.
- ✓ ஆராதனைக்கு நல்ல உறவு அவசியம் ஏனென்றால் இது இரு வழி தொடர்பு.
- ✓ ஆராதனை என்பது மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள மிகநெருங்கிய ஐக்கியமாகும்.
- ✓ ஆராதனை என்பது நம்மையே ஆண்டவருக்கு கொடுத்தல் ஆகும். மத் 26:7, அந்த பெண் இயேசுவின் மேல் வைத்திருந்த அன்பிலே தன் உள்ளத்தையே அவரின் மேல் ஊற்றிவிட்டாள்.

நாம் நமது மடினமான நேரங்களிலும் ஆண்டவரை ஆராதிக்கலாம். சூழ்நிலைகளை காட்டிலும் மேலாக அவர்மேல் அன்பு காட்ட வேண்டும்.

- ✓ ஆபிரகாம் ஈசாக்கை பலியிடும்போது ஆராதித்தான். (ஆதி 22:5; ரோ. 12:1)
- ✓ யோபு குடும்பத்தை இழந்தபோது ஆராதித்தான். (யோபு 1:20)
- ✓ தாவீது பத்சேபாள் இறந்தபோது ஆராதித்தான் (2 சாமு12:20)

இ. துதி ஆராதனையில் மூன்று உட்கூறுகள் உள்ளன.

- ➢ கர்த்தர் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்துதல்
- ➢ கர்த்தரின் மகத்துவத்தை எண்ணி அவரை துதித்தல்
- ➢ கர்த்தருடைய பரிசுத்தத்தை எண்ணி அவரை ஆராதித்தல்

ஒரே கருப்பொருளில் ஆராதனையை நடத்த வேண்டும். (சங் 100:4)

## 5. எப்படி நாம் கர்த்தரை துதித்து ஆராதிப்பது?

**அ. ஆண்டவர் கேட்கும்படியாக**

GCI

சங் 66:8, நம்முடைய தேவனை ஸ்தோத்தரித்து அவரை துதிக்கும் சத்தத்தை கேட்கப்பண்ணுங்கள்.

நாம் கர்த்தரை துதிக்கிறோமென்று மற்றவர்கள் அறிய வேண்டும்.

1. கைகளை தட்டுதல் (சங் 47:1)

கைதட்டுதல் ஓர் சந்தோஷத்தின் வெளிப்பாடு

2. சத்தமிடுதல் (சங் 47:1)

இஸ்ரவேல் மக்கள் யுத்தசத்தமிடுவதில் புகழ்பெற்றவர்கள். அவர்கள் சத்தமிட்ட போது எதிரிகள் பயத்தால் நடுங்கினார்கள். எரிகோ மற்றும் கிதியோன் சம்பவங்களில் துதியின் சத்தத்தால் வெற்றி பெற்றார்கள்.

3. பேசுதல் (சங் 51:15)

என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்

4. பாடுதல்

புது பாடல் – சங் 98:1; 149:1; ஏசா 42:10; வெளி 14:3

யாரும் அறியாத புதிய பாடல்.
தானாக வாயிலிலுருந்து வரும் துதி பாடல்
சங் 100 அல்லது 98ஐ பாடி பாருங்கள்
மரியாளின் துதியை பாருங்கள் (லூக் 1:46-49)
வசனங்களை பிரித்து பரித்து படியுங்ள் அல்லது அப்படியே படியுங்கள்

***ஆ. ஆண்டவர் பார்க்கும்படியாக***

1. கைகளை உயர்த்துதல் (சங் 141:2; 63:4; 134:2)

கைகளை உயர்த்தி ஆண்டவரிடம் சரணடைவது

2. நடனமாடுதல் (சங் 149:3; 150:4; 30:11)

மிரியாம் நடனமாடினாள் (யாத் 15:20-21)

இளைய குமாரன் இரட்சிப்பில் களிகூர்ந்தான்

முடவன் குதித்து எழுந்தான் (அப் 3:8)

தாவீது ராஜா ஆண்டவருடைய பிரசன்னத்தில் நடனமாடினான். (2 சாமு 6:14-16, 23)

நாம் ஆராதனையின் எல்லா நேரங்களிலும் நடனமாடிக் கொண்டே இருக்கக்கூடாது. நடனம் நாம் கர்த்தருக்கு செய்யும் ஊழியமாயிருக்க வேண்டும். தாவீதின் மனைவி நடனத்தை கே செய்த போது அவள் மலடியானாள். நாமும் ஆவிக்குரிய மலட்டுத்தன்மையிருந்து விடுபடுவோம்.

கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட...

GCI

***இ. நம் சரீர அசைவுகளாலே அல்லது நிலைகளினாலே***

1. நிற்றல்: மரியாதை, ஆயத்தம்.

ஆசரிப்புக்கூடாரத்தில் நாற்காலியில்லை. ஆசாரியர்கள் நின்று கொண்டுதான் ஊழியம் செய்தார்கள்.

நெகேமியா 8:5-6

2. முழங்கால் படியிடுதல்: பயபக்தி (சங் 95:6-7)

3. தலைகளை உயர்த்துதல்: வழிபடுதல் (சங் 123:1; 121:1)

4. அமைதி: கர்த்தருக்கு காத்திருப்பது. எலியாவுக்கு ஆண்டவர் சுழல்காற்றிலோ, பூமி அதிர்ச்சியிலோ, அக்கினியிலோ பேசவில்லை. அமர்ந்த மெல்லிய சத்தத்தில் பேசினார். ஆண்டவர் பேச வாய்ப்புகொடுங்கள். எல்லா நேரமும் நீங்களே பேசாதிருங்கள்.

## 6. துதி ஆராதனையின் பலன்கள்

***அ. தேவ பிரசன்னத்தை உணர முடியும் (சங் 22:3)***

- தேவன் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறார்

  இரண்டு மூன்று பேர் எங்கே இருக்கிறார்களோ, அங்கே இருக்குறார்.

  - யோசுவா எரிகோவை சுற்றி வருமுன்பாக
  - சாலொமோன் தேவாலயத்தில்
  - பெந்தெகொஸ்தே நாளில்

  தேவன் தம் ஜனங்களை சுற்றி பார்க்க விரும்பவில்லை. அவர்களோடு வாசம் பண்ண விரும்புகிறார்.

- மோசேயின் ஆசரிப்புக்கூடாரம்

  பிரகாரம்
  - தண்ணீர்த் தொட்டி - சுத்திகரிப்பு
  - பபீடம் – நம்மை தகன பலியாக ஒப்புக்கொடுக்கும் இடம்

  பரிசுத்த ஸ்தலம்
  - ஏழு குத்துவிளக்கு - இயேசுவே வெளிச்சம் சத்தியம்
  - அப்ப மேஜை - ஐக்கிய விருந்து
  - துபவர்க்கம் – துதிபலிகளை சுகந்த வாசனையாய் ஏறெடுத்தல்

  மகா பரிசுத்த ஸ்தலம்
  - உடன்படிக்கைபெட்டி - தேவ பிரசன்னம்

தேவ பிரசன்னத்திற்கு வருவதற்கு ஒரு வழிமுறை உள்ளது

GCI

பிரகாரம் — நன்றி செலுத்துதல் (சங் 100:4)
பரிசுத்த ஸ்தலம் — துதி
மகா பரிசுத்த ஸ்தலம் — ஆராதனை

**ஆ. தேவ வல்லமை வெளிப்பட்டது**

1. கர்த்தர் பேசுவார் (2இராஜா 3:15-16)
2. வல்லமை கட்டவிழ்த்துவிடப்படும் (அப் 16:25-26)

துதியால் சங்கிலிகள் உடைந்து, கதவுகள் திறந்தன.
விடுதலையும் இரட்சிப்பும் தந்தது (அப் 1:29-34)

3. எதிரியின் மேல் வெற்றி (2நாளா 20:22)

பாடகர்கள் தேவனுக்கு நன்றி பாடினார்கள். அவர்கள் யுத்தத்தின் மேல் கவனம் செலுத்தாமல் தேவனை நோக்கி பார்த்தார்கள்.

**இ. வெற்றிக்கான ஆவிக்குரிய ஆயுதம்**

ஜனங்கள் துதித்த போது எதிரியின் மீது யுத்தத்திற்கு அனுப்பினான். (2நாளா 20:22)

பவுலும் சீலாவும் தங்கள் விலங்குகளை கடிந்துகொண்டிருக்கவில்லை. அவர்கள் தேவனை துதித்தார்கள்.

துதி கிறிஸ்தவனின் கையிலுள்ள ஆயுதம். தாவீது வீணையை வாசித்த போது பொல்லாத ஆவி சவுலை விட்டு நீங்கிற்று. (1சாமு 16:23)

வாயின் துதி, கையின் பட்டயம் (சங் 149:6-9)

## 7. துதி ஆராதனை நடத்துவது எப்படி?

**அ. தலைவர் தேவை**

தலைவர் மக்களின் கவனத்தையும் திசையையும் ஆராதனைக்கு நேராக கொண்டு வருவார்.

ஆடுகள் மேய்ப்பனின் சத்தம் கேட்டு நடக்க வேண்டும்

ஆராதனை ஒரே கவனத்தில் இருக்கும் போது ஒற்றுமையின் பெலன் காணப்படும்.

**ஆ. தலைவரின் ஆயத்தம்:**

1. ஜெபி, திட்டமிடு, செயல்படுத்து

2. தேவனுக்கு முன்பாக உன்னை ஆயத்தப்படுத்து

3. வேதபாடத்தை திட்டமிடுவது போல் ஆராதனையை திட்டமிடு

GCI

4. ஒரு கருப்பொருளுக்காக தேவனிடம் காத்துக்கிட

   - ஆராதனை: ஆராதிப்பேன் நான்..., யோசனையில் பெரியவரே...
   - வெற்றி: வெற்றி கொடி பிடித்திடுவேன்..., இயேசு என்னும் நாமத்தில்...
   - இராஜா: மாட்சிமை தொழுவோம் அவர்..., இயேசு ராஜா முன்னே செல்கிறார்...

5. வெவ்வேறு தாளத்தில் உள்ள பாடல்களை தொடர்ச்சியாக பாடுவதை தவிர்க்கவும்

   - சர்வ வல்லவர் என் சொந்தமானார்..., பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுகொள்ள வேண்டும்...

6. ஒரே சுதியில் உள்ள பாடல்களை தொடர்ச்சியாக பாடவும்
7. கருப்பொருளுக்கு சம்பந்தப்பட்ட பாடல்களை தேர்ந்தெடுக்கவும்
8. பாடல் வரி சம்பந்தப்பட்ட வசனங்களை தியானம் செய்யவும்
9. பாடல்களுக்கு இடையே பிரசங்கம் செய்வதை தவிர்க்கவும்
10. எல்லா தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களையும் பயிற்சி செய்யவும்
11. பாடல்களை இணைக்க கற்று கொள்ளவும்

## இ. *சில வழிகாட்டுகள்*

1. ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு விட்டுவிடுங்கள். எந்த சூத்திரத்தை பின்பற்றுவதை பார்க்கிலும் ஆவியானவரை பின்பற்றுவது நல்லது.
2. ஆவியானவரின் மனநிலைக்கு விட்டுகொடுங்கள்

| | |
|---|---|
| சந்தோஷம்: | பிரவேசிப்பேன் நான்... |
| விசுவாசம்: | லேசான காரியம்... |
| வெற்றி: | இயேசு என்னும் நாமத்தில்... |
| மகிமை: | மகிமை உமக்கன்றோ... |
| நன்றி: | நன்றி நன்றி நன்றி... |
| அர்ப்பணிப்பு: | என் ஆத்மாவும் சரீரமும்... |

எப்போது எதை செய்ய வேண்டும் என்பதில் கவனமாயிருங்கள். (யாத் 40:35-38)

வரங்கள் கிரியை செய்ய தருணம் கொடுங்கள்

## ஈ. இசை வாசிப்போருக்கு கொடுக்க வேண்டிய சமிக்கைகள்

GCI

1. முழுபாடலையும் திரும்ப பாட : ஆள்காட்டி விரலை சுழற்றவும்

2. கடைசியாக பாடலை திரும்ப பாட: சிறிய விரலை உயர்த்தவும்

3. கடைசி வரியை திரும்ப பாட : சிறிய விரலை சூழற்றவும்

4. கவியை திரும்ப பாட: : ஆள்காட்டி விரலை உயர்த்தவும்

5. மக்களை சொந்தமாக ஆராதிக்க விட: உள்ளங்கையை தலைகீழ் காட்டி விரல்களை அசைக்கவும்

6. அடுத்த பாடலை பாட: கையை பக்கவாட்டில் அசைக்கவும்

7. அடுத்த சுதியில் பாட: பெருவிரலை உயர்த்தவும்